# குடும்ப தற்கொலை தவிர்க்கப்பட்டது



வாழ்க்கைச் சோர்வினால் நதியினில் குதிக்கவிருந்த அந்த மனிதனிடம் பாவத்தை பராமரிப்பவன் வேண்டினான். நீ தற்கொலை செய்யாதே

நானும் தற்கொலை செய்ய தயார் நிலையிலிருக்கையில் கொரியா மொழியிலுள்ள ஒரு துண்டுப் பிரசுரத்தில் அச்சிட்டிருந்த அம் மூன்று சொற்களை கண்ணுற்றேன். நீ தற்கொலை செய்யாதே என் நம்பிக்கை எல்லாம் அற்று போன நேரம். இனி வாழ்வதில் பயன் ஏதுமில்லை என்றஎண்ணம். என் பிள்ளை பருவத்தில் என் பெற்றோர்கள் ஜெபிப்பதையே வேதத்தை படிப்பதையே நான் கண்டிரேன். ஒரு பெரிய வீடும் மிகுதியான வாழ்க்கை வசதியும் பெற்றிருந்தும் அவர்களுடைய இருதயத்தில் இறைஅன்பிற்கு இடம் இருக்கவில்லை. நாங்கள் பள்ளிக்கு செல்ல வேண்டுமென்று அவர்களுக்கு நிர்பந்தம் இருந்த போதிலும் எங்களை ஞாயிறு பள்ளிக்கோ, ஆலயத்திற்கோ அனுப்ப மாட்டார்கள் கொரியாவிலுள்ள மிக பெரிய உயர்நிலைப் பள்ளியிலும் கல்லூரியிலும் பயில எனக்கு வாய்ப்பு கிடைத்தது. ஆனால் கடவுளை பற்றி ஏதும் அறியேன். மகான்களை மதிக்கவும் மரியாதை செலுத்தவும் என்னைப் பயிற்றுவித்தாலும் கடவுளைக் கனம் செய்யக் கற்றுத்தரவில்லை. வாழ்க்கைச் சூழலினின்று, வழுவியோட முயலும் வலிவற்றவர்கள் தான் ஆலயத்திற்குச் செல்லுவர் என்று எண்ணினேன். ஆகவே அவர்களோடு எவ்வித தொடர்பையும் வைத்துக் கொள்ள நான் விரும்பியதே இல்லை. ஜெபத்திற்காக இறைவன்



முன்னிலையில் முழங்கால்படியிட நேருமென நான் ஒருக்காலும் கனவிற்கூட கருதியதில்லை.

நான் சொந்தமாக வணிகத்தொழிலை துவங்கினேன். ஒரு நல்ல வீடும் இருந்தது. பிரச்சனை எதுவுமின்றி காரியங்கள் மேம்படுமென்றெண்ணினேன். காலம் சற்று முன் சென்றபோது உலக சிற்றின்பங்களைப் பற்றிய எண்ணம் என்னை விழுங்கிற்று. பெரும் பாலும் எல்லா இரவுகளிலும் குடிப்பழக்கம், சீட்டாட்டம், ஆபாச நடனம் ஆகியவற்றில் மூழ்கினேன். வாரம் ஓரிரு நாட்கள் வீட்டிற்குச் செல்லுகையில் வீடு எனக்கு ஏதோ ஒரு விடுதியைப் போலத் தோன்றிற்று.

வணிகத் தொழிலில் நன்கு நடைபெறும் மட்டும் நண்பர்கள் சுற்றிலும் சூழ்ந்தனர். ஆனால் வணிகத்தொழில் இறங்கும் வரிசையில் சென்றபோது நண்பர்கள் ஒவ்வொருவராக என்னை விட்டு நழுவிச் சென்றனர். தாமதமின்றி நான் கொடிய பாவத்திலும் குழம்பிய வாழ்க்கையிலும் உழன்று போனேன்.

நான் அதம் ஆனேன். பொருள் வீழ்ச்சியும் ஆன்மீக விருப்பின்மையும் நேர்ந்த போது எனக்கு நிற்க நிலையில்லாமற் போயிற்று. தஞ்சம் தர எவரேனும் இருக்க மாட்டார்களா என ஏங்கியும், உதவுவார் ஒருவருமில்லை. மதுபானத்தாலும் போதைப்பொ ருள்களாலும் மனத்திடனைப் புனரமைக்க முயன்றேன். ஆனால் அவற்றிற்கும் நான் வக்கற்றுப்போனேன். ஆனால் அவை எனக்கு சமாதானத்தை தரவில்லை.

## குடும்பத்தோடு தற்கொலை செய்வது மட்டுமே எங்கள் முன் இருந்த ஓரே மாற்றுவழி

எனக்கு மனைவியும் பிள்ளைப் பருவத்திலுள்ள ஒரு மகனுமிருந்தனர். நாங்கள் ஒருமித்து தற்கொலை செய்வதன்றி வேறு வழியேதுமில்லை. என் மனைவியின் ஒப்புதலுடன் அந்த திட்டத்தை நிறைவு செய்ய நாங்கள் எங்கள் சொந்த ஊராகிய லோள் என்னும் நகரத்தின்று எங்களை யாரும் அறிந்திராத டேகூ என்னுமிடத்திற்குச் சென்றோம். அங்கே மிகச்சிறிய ஒரு விடுதியின் அறையில் தங்கினோம்.

நிகழவிருப்பதென்ன என்பதை சற்றேனும் அறிந்திராத என் செல்லப்பிள்ளை, ஸோளுக்கு திரும்பிச் செல்ல அடம் பிடித்தான். இருள் சூழும் வரை தற்கொலை செய்வதற்கு காத்திருக்க வேண்டியது இருந்தது. எனவே அவனை சிறிது மகிழ்விக்க அருகிலுள்ள சிறுவர் பூங்காவிற்கு சென்றோம்.

கடவுள் எங்களை கண்ணோக்கினார்; விடுதிக்கு திரும்புகையில் யாரோ ஒருவர் பக்தி விருத்திக்குரிய, ஒரு துண்டு பிரசுரத்தை எனக்கு நீட்டினார். படிக்க விரும்பாமையால் அதனை என் பையினுள் போட்டேன். விடுதியை அடைந்ததும், தற்கொலை செய்வதற்கு முன் என் தகப்பனாருக்கு ஒரு கடிதமெழுத பையினுள் பேனாவை தேடியபோது அந்த துண்டுப் பிரசுரம் என் கரங்களில் அகப்பட்டது. பிறிதொருவரின்



குற்றத்திற்கு என்பதே அதன் தலைப்பு. அதனைப் பிரித்துப் பார்க்கையில் நீ தற்கொலை செய்யாதே அச்சிடப்பட்டிருந்ததைக் கண்டேன். என்ன வியப்பு இறைவனுக்கு நன்றி அத்துண்டுபிரசுரத்தின் வாயிலாக இறைவன் என்னிடத்தில் பேசினார். ஒரு முன்னாள் குற்றவாளியின் அனுபவமே அதில் அச்சிடப்பட்டிருந்தது.

சிறையினின்று வெளியே வந்தபேது அவரை உதவுவார் ஒருவருமே இல்லை எனவும் அத் துண்டுபிரசுரமத்தில் இருந்தது. ஒரு வேலை தேடி போர்ட்டுலாந்து நகரத்தின் தெருக்களில் நான்கு நாட்கள் அலைந்து திரிந்தார். உண்ண உணவில்லை, உறங்க உறைவிடமில்லை ஒரு மர ஆலையின் முன் கிடந்த மரக்கட்டையில் தலை சாய்த்தார். வலிவிழந்து வாழ வழியற்று அவர் அருகிலுள்ள ஒரு பாலத்தின்று தண்ணீரில் குதிக்க முயல்கையில் பாலத்தை பராமரிப்பவன் தடுத்து நிறுத்தினான். திரும்பிப் பார்க்கையில் அண்மையிலுள்ள அப்போஸ்தலிக்க ஆலயத்தின் மேற்பகுதியில் பளிச்சிட்ட எழுத்துக்கள் அவர் கவனத்தை ஈர்த்தது. கண்ணுக்குப் புலனாகாத ஏதோ ஒரு வல்லமை அவரை ஆலயத்திற் செல்ல ஏவிற்று. அங்கே நடைபெற்றுக் கொண்டிருந்த கூட்டத்தில் வைத்து அவர் மனம் நொறுங்குண்டு ஆண்டவரிடம் அழுது புலம்பி அறிக்கையிட்டார். அவருடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டது. அம்மனிதனின் வாழ்க்கையில் ஒரு புதிய ஆரம்பம் தொடங்கியது என்பது எனக்குப் புலனாயிற்று. அப்படி உணர்த்தப்பட்ட அதே இடத்தில் வைத்து

நான் தற்கொலை செய்யும் திட்டத்தை கைவிட்டேன். துண்டுப் பிரசுரத்தில் கொடுத்திருந்த முகவரியில் கடிதமெழுதினேன். சில நாட்களுக்குப் பின்னர் அதற்குரிய பதிலும் கொரியாவைச் சேர்ந்த வேறு சிலருடைய சாட்சியங்களும், நம்பிக்கைச்சுடர் என்னுமொரு இதழும் கிடைக்கப்பெற்றேன். கிறிஸ்தேசுவிற்குள் புதிய படைப்பாக மாறி இதயத்திற் பேரமைதியை பெற்றமைக்கு அவர்கள் இறைவனிடத்தில் நன்றியுடையோராயிருந்தனர்.

இந்த அனுபவம் எனக்கும் கிடைக்காதா...? கிறிஸ்துவிற்குள் புதிதாய் பிறந்த அந்த தோழர்களை என் கண்களால் நேரில் காண நான் புஸான் நகரத்திற்கு சென்றேன். அங்குள்ள அருட்பணியரை சந்தித்த போது அவர் என்னை அவருடைய இல்லத்திற்கு அழைத்தார். என்னையும் பாவக்கட்டுகளினின்று விடுவித்து இரட்சிக்கிறதெய்வீக வல்லமையைக் குறித்து அவர் அன்னிடம் விளக்கினார். என்மன சாட்சியில் ஆழமான பாவ உறுத்தல் உண்டாயிற்று. நான் கெட்டுபோன பாவி என்பதை உணர்ந்தேன். எனினும் பல்லாண்டுகளாக இறைவனையும் கிறிஸ்தவர்களையும் தூற்றித்திரிந்த என்னை இறைவன் மன்னிப்பாரா என்றஐயமும் என்னை ஆட்கொண்டது.

சபையிலுள்ள சகோதர சகோதரிகள் எனக்காக மன்றாடினர். என் வாழ்க்கையில் வந்து போன எல்லா பாவங்களையும் கர்த்தரிடம் அறிக்கையிட்டேன். கண்களிலிருந்து கண்ணீர் மளமளவென பெருக்கெடுத்து ஓடிற்று. அந்நேரம்



நம் வானகத்தந்தை என் மனதில் மறுமலர்ச்சி யினை உருவாக்கினார். என் இதயத்தில் வியத்தகு பேரமைதியைப் பகிர்ந்தார். புகைப் பிடித்தல் குடிபழக்கம் போதைப் பொருள்களின் மேலிருந்த வேட்கை தற்கொலைப் பற்றுள்ளம் வாழ்க்கையை கசக்கிபிழிந்த தீயநெறிகள் அனைத்தும் நீங்கி போயிற்று. தொடர்ந்து பாவத்தின்மேல் வெற்றி ச்சிறக்கும் மன உறுதியையும் எனக்களித்தார்.

முற்றிலும் ஒரு வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்க்கையை எட்டிசேரலாமென்று புலனான போது, என் இதயம் அதனையே நாடிற்று. நான் என்னையே இறைவனிடம் அற்பணித்தேன். அப்போது இறைவன் எனக்கு மேன்மையான ஆன்மீக வாழ்க்கையை தந்தருள திருவுளம் பற்றினார். ஜெபத்தை நிறைவு செய்து, முழந் தாட்படியினின்று எழுந்திருக்கையில் என் மகனும் என் முன் நின்று கொண்டிருந்தான். அவனும் எனக்காக ஜெபிப்பது என் காதில் விழுந்தது. அவ்விடத்தைவிட்டு நகர என் மனம் ஏனோ அனுமதிக்கவில்லை. நான் மீண்டும் முழங்கால் படியிட்டேன். அவ்விரவில் தூய ஆவியானவரின் வல்லமை அக்கூடுகையை ஆட்கொண்டது. அருளின் மாமழை அவ்வறையை நனையச் செய்தது. ஆடவரும் பெண்டிரும் நானும் உட்பட பன்னிருவர் ஆவியானவரால் நிரப்பப்பட்டோம். அவ்விரவு என் வாழ்க்கையில் மகத்தானதொரு திருப்புமுனையாக அமைந்திற்று.

நான் இறைமுன்னிலையில் ஓர் உறுதி மொழியினை எடுத்துக் கொண்டேன். எனது

எஞ்சிய வாழ்க்கையை உம்முடைய மகிமைக் காகவும், பாவத்தினால் அழிந்து அலைகின்ற ஆத்துமாக்களை தேடிச் செல்லுவதற் காகவும் பயன்படுத்துவேன். எனக்கு கொரியாவின் சபை அலுவலகத்தில் பணியாற்றிட இறைவன் ஒரு நற்பேறினையளித்துள்ளார். இப்பொழுது, நான் மருத்துவமனைகளிலும், சிறைகளிலும் சென்று, பாவக்கட்டுகளினின்று மனிதனை விடுவிக்கிறவி டுதலையின் செய்தியினை அறிவித்துக் கொண்டிரு க்கிறேன். தெய்வீக வல்லமையின் சான்றுரைத்து, தெய்வத்தின் திருப்புகழை பறையறைதலே எனது பேரின்பம்.

நாங்கள் நெருப்பிலிருந்து எடுக்கப்பட்ட கொள்ளிகளென்பதையும் இப்பொழுது எங்களுக்கு முடிவில்லாத வாழ்க்கையைப் பற்றிய நம்பிக்கைச் சுடர் உண்டு என்பதையும் நானும் என் வீட்டாரும் ஒரு போதும் மறவோம். என் வாழ்க்கையின் எதிர்வரும் நாட்கள் இயேசுவுக்கே உரியது.

**-லி. ஜோங் ஹோ**

**The Light of Hope**
Cheppad P.O., Alappuzha Dist - 690 507
Kerala State, India